பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

வெளிநிலைப் பல்கலைக்கழக கல்வி
G. A. Q.
1989 ஏப்ரல்
பொருளியல்
S. வரதராஜன்
சனி, ஞாயிறு
1-00—3-00 p. m.
BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**உதயன்**

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

வெளிநிலைப் பல்கலைக்கழக கல்வி
B.A. 1988 டிசம்பர்
பொருளியல்
S. வரதராஜன்
பிரிவு: I சனி 8-00 a.m.
வியாழன் 10.00 a.m.
பிரிவு: II சனி 3-00 p.m.
வியாழன் 10.00 a.m.
BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

26

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடு ஆனி மீ 23 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 22 ( 07 - 07 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 125

# வடக்கு கிழக்கில் தேர்தல்: முத்தரப்பு உடன்பாடு தேவை

## என்கிறார் பிரதிப்பொலீஸ் மாஅதிபர்

—அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ்—

யாழ்ப்பாணம், ஜூலை 7

இந்திய அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள், இலங்கை அரசு ஆகிய முத்தரப்பாருக்கும் இடையில் உடன்பாட்டு நிலை ஒன்று உருவான தன் பின்னரே, வடக்கு கிழக்கில் சரியான தேர்தலை நடத்த முடியும்

அதற்கு முன் தேர்தல் நடத்துவதானால் பேருக்கு நடத்தும், கண்துடைப்பு தேர்தலாகவே அது முடியும்.

இவ்வாறு வடக்கு-கிழக்குப் பிரபந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. மகேசன் செல்வரத்தினம் கருத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரியும் பொலீஸ் உத்தியோகத்தர்களின் நலன்களைக் கவனிக்கவும், அவர்களுக்கு உள்ள குறைபாடுகளைக் கேட்டறிய ம் இரண்டு நாள் விஜ

(... ம் பக்கம் பார்க்க)

“ஒப்பரேஷன் செக்மேற்” தொடருமாயின்

# சென்னைப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்படலாம்!

## கிட்டு விடுத்த அறிவிப்பு

சென்னை, ஜூலை 7

இந்திய அமைதிகாக்கும் படையினர் வன்னிப்பிரதேசத்தில் மேற்கொண்டு வரும் “ஒப்பரேசன் செக் மேற்” நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்படுமானால், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும், இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் நடத்தப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்படலாம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] சென்னையில் இப்படி அறிவித்திருக்கிறார்.

“இந்தியன் எக்ஸ்பிரஸ்” பத்திரிகைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

“ஒப்பரேசன் செக் மேற்” - இராணுவ நடவடிக்கைகளின் தீவிரத் தன்மை விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும் தலைவர் வே. பிரபாகரனையும், தற்போது நடைபெற்றுவரும் பேச்சுக்கள் மீது அவநம்பிக்கை கொள்ள வைத்திருக்கிறது.- என்றும் கிட்டு தெரிவித்திருக்கிறார்.

பேச்சுக்களில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்றும் —

இது வரை இணக்கம் காணப்பட்ட விடயங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதும்

(6ஆம் பக்கம் பார்க்க)





தமிழீழப் போராட்டத்திலே ஒரு பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய நெல்லியடித் தாக்குதலில் உயிர்த்தியாகம் செய்த கரும்புலி கப்டன் மில்லரின் ஓராண்டு நினைவு தினம் நேற்று முன் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் நினைவுச் சின்னமாக இன்றும் விளங்கிக் கொண்டிருக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் உருக்குலைந்த கட்டடச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த கப்டன் மில்லரின் படத்துக்கு மூதாட்டி ஒருவர் மலர்தூவி, கைகூப்பி அஞ்சலி செய்வதை முதலாவது படத்தில் காணலாம்.

கப்டன் மில்லரின் நினைவு தினத்தையொட்டி மந்திகை ஆதார வைத்தியசாலையில் இரத்ததான வைபவமும் நடைபெற்றது. நெல்லியடி வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. எஸ் சொர்ணராஜா இரத்த தானம் செய்த போது எடுக்கப்பட்ட படம்.

(படங்கள் வடமராட்சிச் செய்தியாளர் சி. சுந்தரலிங்கம்)

# தெளிவான நிலைமை வார முடிவில் தெரியும்

சென்னை, ஜூலை 7

சென்னையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுக்கள் நம்பிக்கையூட்டுபவையாக இருக்கின்றன.

பேச்சுக்கள் தொடர்பாகத் தெளிவான நிலை ஒன்று இவ்வார இறுதியில் கிட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

—இப்படி ‘இந்து’ நாளிதழ் நேற்றுச் செய்தி வெளியிட்டது.

அரசியல் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளை ஈடுபடுத்துவதில் காலதாமதம் ஏற்படும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மன்சூர் இடமாற்றம் பழிவாங்கும் நடவடிக்கை என்பது விஷமத்தனம்

## தூதுக் குழுவிடம் செயலாளர்

யாழ்ப்பாணம், ஜூலை. 7

விசேட ஜீ. சி. ஈ. பரீட்சை நடத்தும்படி கல்வி அமைச்சை வற்புறுத்திய தற்காகவே வடமாநில கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து ஜனாப் மன்சூர் இடமாற்றம் செய்யப்பட்டார் என்பதும்—

பழிவாங்கும் நடவடிக்கையாக அமைச்சு அவருக்கு வேலைநீக்க உத்தரவு வழங்கியது என்பதும்—

பொய்மையானதும் விஷமத்தனமுமான பிரசாரமாகும்.

—இப்படி இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜயமானே தெரிவித்ததாக சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா நகைகள் வரைவில் மீளளிப்பு

## வங்கி மேலிடம் உறுதிமொழி

வவுனியா மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் கூடிய விரைவில் மீளளிக்கப்படும் என உறுதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தஉறுதிமொழியை அடுத்தே இந்த வங்கிக் கிளைக்கு முன்னால் செவ்வாயன்று நடைபெற்ற மறியல் போராட்டமும் கைவிடப்பட்டது.

கடந்த செவ்வாயன்று மறியலினால் வவுனியா மக்கள்வங்கிக்கிளை ஸ்தம்பிதம் அடைந்ததுதெரிந்ததே.

இணைப்பதிகாரி பிரிகேடியர் திலகரட்ணம, நகை அடகு வைத்தோரின் பிரதிநிதிகளையும், வங்கிக் கிளையின் முகாமையாளரையும் அழைத்து விஷயத்தைக் கேட்டறிந்தார்.

பின்பு வங்கி மேலிடத்துடன் தொடர்புகொண்டபோது மேற்கூறிய உறுதிமொழி வழங்கப்பட்டது.

அதன் பின்னர் வங்கிக் கிளை நேற்று மீண்டும் வழமைபோல்இயங்கின.

[உ–கு–164]

சமூக உணர்ச்சியை வளர்க்க

# தங்கமகர யாழ் விருது; கம்பன் கழகம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஈழத் தமிழ்ச் சமூகத்துக்குத் தொண்டாற்றிச் சாதனை புரிவோருக்கு “தங்க மகர யாழ்” விருது வழங்கிக் கௌரவிக்கப்படும்.

கலை, இலக்கியம், சமூகம், அறிவியல், தொழில் நுட்பம் ஆகிய ஏதாவது ஒரு துறையைச் சேர்ந்த ஒருவருக்கு வருடாந்தம் இந்த விருதை வழங்குவதற்கு அகில இலங்கைக் கம்பன் கழகம் முடிவு செய்துள்ளது.

அகில இலங்கை ரீதியில் வழங்கப்படும் இந்த விருது கம்பன் புகழ்ப் பரிசாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கழகத்தால் நியமிக்கப்பட்ட ஓர் அறிஞர் குழு

(6-ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
07 - 07 - 1988
ஆனி 23
வியாழக்கிழமை
சுபநேரம்:
7-28 முதல் 08-58 வரை
ராகுகாலம்:
1-28 முதல் 2-58வரை
இவை இரவுக்கும் பாலுக்கும் பொருந்தும்
அட்டமி நவமி

# இந்திய பிரிகேடியருக்கு நீதிமன்றம் நோட்டீஸ்

## கருத்து தெரிவிக்க தூதரகம் மறுப்பு

கொழும்பு, ஜூலை 7

வவுனியா வாலிபர் ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு ஒன்று தொடர்பாக இந்திய அமைதிப்படை அதிகாரி பிரிகேடியர் மன்ஜித் சிங் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு அப்பீல் நீதிமன்றம் நோட்டீஸ் உத்தரவு பிறப்பித்தது.

எதிர்வரும் ஜூலை 21 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு அப்பீல் நீதிமன்றம் கடந்த செவ்வாயன்று உத்

( 6ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸ் பதவிகளை விட்டு விலகுமாறு

## விடுதலைப் புலிகள் கோரிக்கை

வவுனியா, ஜூலை 7

பொலீஸ் துறையில் புதிதாக நியமனம் பெற்றவர்களை உடனடியாக அப்பதவியில் இருந்து விலகும்படியும், தமிழ் மக்கள் பொலீஸ் நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என்றும் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைமை அலுவலக அரசியல் பிரிவு இது தொடர்பான வேண்டுகோளை விடுத்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பின் இப்போது நிலவும் தேக்கமான காலப்பகுதியில் மீண்டும் பொலீஸ் நிர்வாகத்தை ஏற்படுத்தி வடக்கு கிழக்கில் நிலைகுலைந்துள்ள அரச நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்காக இலங்கை அரசு முயன்று வருகின்றது.

அவசர அவசரமாக அமைக்கப்பட்டுள்ள புதிய பொலீஸ் படை தமிழ் மக்களுக்கு எவ்வித பாதுகாப்பையும் வழங்கக்கூடிய அமைப்பாகச் செயல்படக்கூடிய ஒன்றல்ல.

ஆயுதமும், அதிகாரமும் அற்ற நிலையில் வெறும் சம்பளத்துக்காக இயங்கும் படையாக இது அமைக்கப்பட இருந்ததால் அக்காலகட்டத்தில் நாம் இது குறித்து கருத்தில் கொள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# குண்டுகள் வெடித்தன! இரத்தினபுரியில் தேர்தல் மோதல்!!

## மூவர் பலி: 23 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 7

இரத்தினபுரித் தொகுதியில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன. தேர்தல் கூட்டங்களின் போது மோதல்களும் இடம்பெற்றன.

இச்சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டனர்; 23 பேர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

சுதந்திரக்கட்சியின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக அனுமதி:

# தகுதி நிலைப் புள்ளிகள் விரைவில் வெளியாகும்

பல்கலைக் கழக அனுமதிக்குரிய தகுதி நிலைப் புள்ளிகள் (Cut out marks) பற்றிய விவரங்கள் இன்னும்ஒரு தினங்களில் வெளியிடப்படும்.

இவ்வாறுதகவலறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத்தெரிவித்தன.

கடந்த வருடம் ஜீ. சி. ஈ. உயர் தரப் பரீட்சையில் தோற்றித் தமக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்குமா, இல்லையா என்பது தெரியாமல் இருக்கும் மாணவர்கள்–

எதிர்வரும்23திகதிஆம் ஆரம்பமாகும் பரீட்சைக்கு தோற்றலாமா, விடலாமா என்ற நிச்சயமற்ற நிலையில் காணப்படுகிறார்கள்.

இது பற்றி வினவிய போதே மேற்படிவிஷயம் தெரிவிக்கப்பட்டது.

புள்ளிகள் பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டால் மாணவருக்கு எந்தப் பிரச்சினையுமே இருக்காது எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ–கு)

## முச்சந்தி முரளி



அப்ப தேர்தலிலை மோதாமல் கூட்டத்திலை மோதிறது எண்டு யோசிச்சுவிட்டினமோ.? இரண்டு சாராரும்...!

# பாக்கீரின் மகன் எம். பி

பேருவளைத் தொகுதியின் எம். பியாக ஜனாப் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கரை நியமிப்பது என்று ஐ.தே.க. செயற்குழு முடிவு செய்தது,

இவர் பதவி விலகிய அல்ஹாஜ் பக்கீர் மார்க்கரின் புதல்வர் ஆவர்.

தென் மாகாணத்தின் ஆளுநர் பதவியை ஏற்பதற்காக அல்ஹாஜ் மார்க்கர் எம்.பி பதவியை ராஜினாமாச் செய்தார். [எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அதிகம் பாவிக்கப்படாத நல்ல நிலையிலுள்ள அமெரிக்கத் தயாரிப்பான 24 அங்குல ''பேப்பர் கட்டர்'' விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 71 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5783)

புதிய Reconditioned Honda புதிய பழைய Model C.50, C.90, C.D-90 MB 5 மோட்டார் சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு No 16 Kandy Road, Jaffna (உதவி அரசாங்கஅதிபர் பணிமனை முன்பாக) (5782)

நாஷனல் JVC Akai வீடியோ டெக்கிற்கான மோட்டர், வீடியோ செட் பெல்ற், ICகள் சகல ரெலிவிஷன்களில் Flybach ரியூனர் ரியூப் மற்றைய உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களுக்கு சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு Jaffna Technical Institute Stanly Road [றெயில்வே கடவை அருகே] (C/5570)

எங்களிடம் கன்னாதிட்டி 56 ஆம் நம்பர் பழைய கட்டடத்தின் சல்லுகளும், மக்கியும் உண்டு. இலவசமாக தேவைக்கு ஏற்றிக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: த. குமாரசாமி ரெக்ஸ் ரைல்ஸ் 248, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (5785)

புதிய Sisil Deluxe Deepfreezer (D/ 140) உடனடியாக விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். 45, இராசாவின் தோட்டம் ரோட், (றயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். (5788)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒருநாள் Shetna B/380 (Bad Cock) பிரவுன் குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள் 8-7-88லும் ஒருநாள் ரெற்றுபிரவுன் பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 19-7-88லும் விநியோகிக்கப்படும் 250க்குமேல் சேவல் குஞ்சு எடுப்பவர்களுக்கு விலை-4/-. விபரங்களுக்கு (1) R. S. K. Farm முருகபதி, உடுவில், (2) குபேரன் ஸ்ரோர்ஸ், சொக்குவில் சந்தி, சொக்குவில். 4962

### மூன்று சக்கர வண்டி விற்பனை

நோயாளரின் பாவனைக்குதவும் 3 சக்கர வண்டி விற்பனைக்குண்டு. இந்தியாவில் செய்யப்பட்டது. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 144, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் (C. 5684)

### நாற்காலி விற்பனை

நாலு சக்கர நாற்காலி விற்பனைக்கு உண்டு. Adjustable all steel German Make தொடர்பு விலாசம் கா. சிவராஜசிங்கம் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (4955)

### காணி விற்பனை

அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகாமையில் வழிவாய்க்கால் கிணற்றுப்பங்கு வசதிகளுடன் உள்ள 5 பரப்பு வளவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு விலாசம்: V. நல்லையா, அளவெட்டி. (4891)

## தேவை

நான்கு சிறுபிள்ளைகளை பராமரிக்கவும், வீட்டு வேலை செய்வதற்கும் 12 வயதுமுதல் 35 வயதுக்கு இடையிலான பணிப்பெண் தேவை. அனுபவமுள்ளவர்கள் உதவியற்றவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் அதிகம் கொடுக்கப்படும் தொடர்புவிலாசம் 'இரத்தின மாளிகை, 57, கன்னாதிட்டி யாழ்ப்பாணம் - (2) பேபி அஞ்சல வீதி, வல்வெட்டித்துறை. (4897)

### உடனடி தேவை

Fabricated - எல்லா விதமான எஸ்லோன் உதிரிப்பாகங்கள் செய்யக் கூடியவர்கள் (Fabricated S.Lon Fittings) உடனடியாக தேவை. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும். நேரில் வரவும்:- N.E. இன்டஸ்ரீஸ் 141, 143, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (4958)

### மணிக்கூடு திருத்துபவர் தேவை

மணிக்கூடு திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். Sai Recording Centre 225, ஆடியபாத ரோட் நல்லூர் மாக்கெற் யாழ்ப்பாணம்.(4960)

### வான் றைவர் தேவை

விற்பனை வாகனத்திற்கு அனுபவம்வாய்ந்த ஓட்டுனர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுடன் வைற் பீல்ட் இன்டஸ்ரீஸ் வல்லை ரோட், சங்கானை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (C/5648)

### மின் ஒட்டுனர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலைக்கு அனுபவமிக்க மின் ஒட்டு வேலை தெரிந்த மெக்கானிக் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி C/o 266 உதயன் யாழ்ப்பாணம். தகுந்த சம்பளம் வழங்கப்படும். (4953)

### பெண் விற்பனையாளர் தேவை

சில்லறை விற்பனைக் கடையில் வேலை செய்வதற்கு நம்பிக்கைக்குரிய பெண் விற்பனையாளர் தேவைப்படுகின்றது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி- 144, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.(C/5685)

### றேடியோ திருத்துவதற்கு ஆள் தேவை

றேடியோ, T.V.(ரி.வி) டெக், திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை நேரிலோ, அல்லது கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்: லக்ஷ்மன் வீடியோ கிளப், வேலணை சந்தி, வங்களாவாடி. (4961)

### நகைக்கடைக்கு பெண்கள் தேவை

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றுவதற்கு யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட இரண்டு ''பெண்பிள்ளைகள்'' தேவை. உங்கள் பெற்றோருடன் நேரில் வரவும், நிர்வாகம், லலிதா ஜுவெல்லறி, 213 கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 4964

### TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### கோழிப்பண்ணைக்கு வேலையாள் தேவை

மானிப்பாயில் கோழிப்பண்ணையில் வேலைசெய்ய அனுபவம் உள்ள 15க்கும் 35க்கும் இடையிலான வயதை உடைய வேலையாள் தேவை. இருப்பிட வசதி தரப்படும் சனிக்கிழமை காலை 9 மணி அளவில் R. S. K. Farm முருகபதி, டச்சுரோட், மான்ஸ் கல்லூரிக்கு அருகாமை, உடுவில். தொடர்பு கொள்ளவும் 4963

### தவறிவிட்டது

சுகந்தி சிவனையா I/C இல. 657572004 கெலன் ரஞ்சினி பேதுறுபிள்ளை ஆகிய எமது அடையாள அட்டைகள் திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் யாழ்/காரியாலயத்தில் கொடுக்கும் வண்ணம் தயவாய் கேட்டுக்கொள்கின்றோம்.(4952)

துரைச்சாமி மகாலிங்கம் காளிகோவிலடி களபூமி, காரைநகர் ஆகிய எனது இல.530683246V அடையாள அட்டை சங்கானை பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் விலாசத்திற்கு அல்லது உதயன் யாழ்/ காரியாலயத்தில் கொடுக்கும் வண்ணம் தயவாய் கேட்டுக்கொள்கின்றேன். சங்கானை பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள கடை ஒன்றில் கொடுத்தாலும் நன்று. (4954)

கந்தையா தெய்வேந்திரம் 17, கோவில் ஒழுங்கை யாழ்ப்பாணம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 32,102,1913 Vம் இ. போ. ச. அடையாள அட்டை இல. 2728 தவறிவிட்டது. தயவு செய்து எடுத்தவர்கள் மேலே சொல்லப்பட்ட விலாசத்தில் அல்லது உதயன் யாழ்ப்பாணத்தில் கொடுக்கவும். நன்றி. (4957)

### பரிசைப் பெற்றுக்கொள்ளவும்

கொக்குவில் மஞேன் மணி சனசமூக நிலையம் 30-6-88 இல் நடாத்திய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற சீட்டு இலக்கங்கள்:- 897, 686, 891, 608, 169, 904, 727, 531, 769, 217, 526, 1504, 1556 பி. ப. 5 மணி முதல் நிலையத்தில் பரிசைப் பெற்றுகொள்ளலாம். S. K. சண்முகநாதன்- செயலாளர் (4956)

## மணமகன் தேவை

வயது 25 முதல் 43 வரையுமுள்ள செவ்வாய் குற்றமுள்ள, குற்றமற்ற இந்து வேளாளர் குல பெண்களுக்கு டாக்டர்கள் என்ஜினியர்கள் பட்டதாரிகள், தொழில்நுட்ப அதிகாரிகள் (T/A) வெளிநாட்டில் தொழில் புரிவோர் விண்ணப்பிக்கலாம். நல்ல சீதனம் கொடுக்கப்படும். சிறிசரன் பலாலி வீதி, திருநெல்வேலி- நேரில் வரவும். (4900)

## மணமகள் தேவை

30 வயது உடைய இந்து வேளாளர் குல செவ்வாய் குற்றமற்ற சிவிலியாவில் தொழில் புரியும் Chartered Accountantற்கு அழகிய 5' 4'' உயரமுள்ள டாக்டராக தொழில் புரியும் மணமகள் தேவை. படத்துடனும் சாதகத்துடனும் நேரில் வரவும். E. சிறிகரன் பலாலி வீதி, திருநெல்வேலி. வைத்திலிங்கம், மர ஆலைக்கு அருகில். (4951)

### பாடல் பதிவு செய்தல்

நீங்கள் விரும்பும் மதுரகான பாடல்களை நவீன எலக்ரோனிக் ஈக்குவலைசர் மூலம் ஸ்ரீறியோ முறையில் பதிவு செய்து கொள்ளவும் நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மிக பழைய புதிய பாடல்களைத் தெரிவு செய்து கொள்ளவும். நாடுங்கள்: விக்டர் அன் சன்ஸ் 100, ஸ்ரான்லி வீதி, விக்ரேஸ் மியூசிக் சென்ரர் 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குழி, விக்டர் அன் சன்ஸ் 81, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். (C.5596)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகல விதமான றேடியோ, வீடியோ டெக், T. V. மின்விசிறிகள், மின் அடுப்புக்கள், மின்மோட்டர்கள், றைஸ்குக்கர், சுமீற், மொலினெக்ஸ் கிரைன்டர்கள், எலக்ரோனிக் கல்குலேற்றர், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடுங்கள். விக்டர் அன் சன்ஸ் (விக்ரேஸ்) 100 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். C/5594

---

# வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்

## G.A.Q 89 APRIL
## B.A 88 DECEMBER

பிரிவு 2, துரித மீட்டல் ஆரம்பம்
10. 7. 1988 மாலை 2 மணி

எமது ஆசிரியர் குழு:
பொருளியல்:- திரு. கிருஷ்ணனந்தன்
தமிழ்:- திரு. குழந்தை
இந்துநாகரிகம்:- திரு. காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்:- திரு. குணராஜா
அரசியல்:- திரு. மஃறூப்

முக்கிய குறிப்பு:
I பட்டப் படிப்பு மாணவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு
II இவ் ஆசிரியர்கள் எமது நிறுவனத்தில் ஒருங்கிணைந்து சிறப்பாகப் போதனைகளை நடத்துகின்றனர்.

**விக்னு டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
(C. 5689)

---

அமெரிக்கத் தீவு (Saiban)

# உடனடி வேலைவாய்ப்பு

மேசன் (Masons)
தச்சுத் தொழிலாளர் (Carpenters)
இரும்பு வளைப்போர் (Bar Benders)

சம்பள விகிதம் - 550 U. S Dollar

முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

உடனடியாக தொடர்பு கொள்ள:
**க. தம்பிப்பிள்ளை**
சித்தன்கேணி.
(சித்தன்கேணி வைரவர் கோவிலுக்கு அருகாமையில்)
(5188)

---

# BECON கல்வி நிலையம்

## கலை, வர்த்தகம்
## A/L 89

(ஒரு வருட வகுப்பு)
சனி, ஞாயிறு வகுப்புகள்

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| வர்த்தகம்:- | ரட்ணம் |
| கணக்கியல்:- | மரியதாஸ் |
| அளவையியல்:- | S. S. மனோகரன் |
| தமிழ்:- | மீரா |
| இந்து நாகரிகம்:- | ஜோதீஸ்வரன் |

ஆரம்பம்: 9-7-88
சனி 7. 00 a. m

**BECON**
156/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
(சி 5587)

---

யா/ வைத்தீஸ்வர வித்தியாலயம்

## முறைசாராக்கல்வி பயிற்சி நெறி

வானொலி பேணல், மோட்டார் றிவைண்டிங், மின் உபகரண உற்பத்தி பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சான்றிதழ்களுடன், யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கவும்.

அதிபர்
யா/ வைத்தீஸ்வரா வித்தியாலயம்
(C 5689)

---

## Diploma in Computer Programming Basic

4 Months Weekends
Fees - மாதம் 250/-

Aptitude Test - 15-07-88
தேர்வுப் பரீட்சையில் அதிக புள்ளிகள் எடுக்கும் பரீட்சார்த்திக்கு Lady Love lace Memorial Scholarship வழங்கப்படும்.

A Valuable Certiifcate will be issued at the end.
வெளிநாடு செல்பவர்களுக்கு மிக உகந்தது.

ஆரம்பம்:- 16-07-88

C. I. M. A, A. A. T, I. A. B. நடைபெறுகின்றன.

## School of Business Administration

(O. L. R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்)
16, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி-5686)

---

சாய் ஏஜென்சி

# ஓமானில் வெற்றிடங்கள்

கீழ்க்காணும் தொழில் நுட்பவியலாளர்களுக்கு உடனடி வெற்றிடங்கள் உண்டு.

| | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. Crank Shift Operators | 4 |
| 2. Boring " " | 4 |
| 3. Lathe Machine " | 4 |
| 4. Engineer in Oxygen and actygene plant to manage the plant B. R. | |

அனுபவம், தகைமையைப் பொறுத்துத் தெரிவு செய்யப்படும்.

வீட்டுப் பெண்கள்:
100 வெற்றிடங்கள் உண்டு

முஸ்லிம், முஸ்லிம்களல்லாத பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களுக்கு:
K. சோமசுந்தரம்
(சமாதான நீதிவான்)
21, வில்சன் வீதி,
கொழும்பு-12

அல்லது

நாகமணி குணதீசன்
விளானை,
காரைநகர்.
(சி-5694)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



சிவபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வம்
அமரர்
**சங்கரப்பிள்ளை கிருஷ்ணராஜா**
**(சினித்தம்பி)**

தோற்றம்: 07 - 02 - 1941
மறைவு: 07 - 06 - 1988

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் இருப்பிடமாய், நேசத்தின் கரங்களாய், மலரின் சுகந்தமாய், தேனின் இனிமையாய் இருந்து நன்நெறி காட்டி எம்மையெல்லாம் ஆதரித்து, வழிகாட்டி வளர்த்த அன்புத் தெய்வமே எம்மை விட்டு மறைந்து சென்றாலும் நீங்கள் என்றும் எமது மனதைவிட்டு அகல மாட்டீர்கள். உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள், மற்றும் உறவினர்கள்.
டச்சுவீதி,
உடுவில்,
சுன்னாகம்.
(5787)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
ஆனந்தக் குமாரசுவாமி
மண்டபத் திருத்த வேலைகளுக்கான
**கேள்வி அறிவித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற் குறிப்பிடப்பட்ட வேலையை மேற்கொள்வதற்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விதாரர்கள் குடிசார் வேலைகளுக்காக ரூபா 250,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கேள்விப் பத்திரங்களைப் பெற மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமாக ரூபா 500/- செலுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெற்ற பற்றுச் சீட்டை வேலைப் பொறியியலாளரிடம் 14-07-1988 முற்பகல் 10.00 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 20-07-1988 முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் அதே தினம் காலை 10.30 மணிக்கு திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் பிரசன்னமாயிருக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

யாழ். பல்கலைக்கழக கேள்விச்சபை எந்தவொரு கேள்விப் பத்திரத்தையும் நிராகரிக்கும் உரிமையுடையது.

திருநெல்வேலி, பதிவாளர்
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(C 5611)

★ யாழ் குடாநாட்டில்

# சுகாதாரத் துறை புனரமைப்பு:

# 5 கோடி 90 லட்சம் ரூபா தேவை

## அரச அதிபருக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ் மாவட்டத்தில் சுகாதாரத் துறையைச் சேர்ந்த ஸ்தாபனங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு ஐந்து கோடியே தொண்ணூறு லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

யாழ் சுகாதாரத் திணைக்கள அத்தியட்சகர் திரு. என். கனகசபை, யாழ் அரச அதிபருக்குச் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் குடாநாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக சுகாதாரத்துறைக்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

அதனை ஈடுசெய்வதற்கும் மறு சீரமைப்புச் செய்வதற்கும், வாகனங்கள், மருத்துவஉபகரணங்கள் ஆகியவற்றை றக் கொள்வனவு செய்வதற்கும், சேதமடைந்த கட்டடங்களைத் திருத்தி அமைப்பதற்கும், புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் ரூபா 5 கோடி 90 லட்சம் அரச அதிபரிடம் கோரப்பட்டிருக்கிறது.

கட்டடங்களுக்கு நான்கு கோடி ரூபாவும்-

வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு கோடி ரூபாவும் -

மருத்துவ உபகரணங்களுக்கு 80 லட்சம் ரூபாவும்-

தளபாடங்களுக்கு ஏழு லட்சம் ரூபாவும் கோரப்பட்டுள்ளது.

இதே சமயம் பல வருடங்களுக்கு மேலாக யாழ் மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் எதுவித திருத்த வேலைகளும் செய்யப்படவில்லை என்பதை சுகாதாரத் திணைக்கள அத்தியட்சகர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவ உபகரணங்களும் வழங்கப்படவில்லை. வாகனங்கள் பற்றாக்குறை காரணமாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தமது அலுவல்களை ஒழுங்காக மேற்கொள்ள முடியாமல் இருக்கிறது என்றார் அவர்.

பொதுமக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய அத்தியாவசியத் துறைகளில் ஒன்றான சுகாதாரத் துறை யாழ் குடாநாட்டில் கவனிக்கப்படாமல் பின்தள்ளப்படுவது பெரும் மனவேதனையை அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

## ஊரடங்கு நேரம்

கோப்பாய் ஜூலை 7

கோப்பாய், நீர்வேலிப் பகுதியில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் மாலை 7 மணி முதல் காலை 5மணி வரை அமுலிலிருக்கும் என அமைதிப் படையினர் அறிவித்துள்ளனர்.

மறு அறிவித்தல்வரை இது தொடர்ந்து அமுலிலிருக்கும் என அறிவிப்பு பலகையில் எழுதப்பட்டுள்ளது. (இ-72)

புதிய உயர் கல்லூரி

G.C.E. O/L
Day Classes
Evening Classes

ஆரம்பம்- 15 - 7 - 88

காலை 8 மணி - மாலை 4 மணி

SPOKEN ENGLISH
With GRAMMAR
BRITTO

2 ஆம் பிரிவு ஆரம்பம்

விபரங்களுக்கு,
S. அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C 5659)

தேவை

எமது நிறுவனத்திற்கு பியோன், லிகிதர் ஆகியோர் தேவை. 30 வயதிற்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகுதியானவர்கள் தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் 8-7-88 காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(A.S.சங்கரப்பிள்ளை கட்டடம்-1ஆம் மாடி)
[சி 5665]

# பொதுமக்கள் ஆதரவின்றி எந்த ஒரு ஸ்தாபனமும் வளரமுடியாது

## ஆண்டுவிழாவில் உரை

யாழ்ப்பாணம்ஜூலை7

இன்றைய நிலையில் எந்தவொரு பொதுஸ்தாபனமும் பொதுமக்களுடைய ஆதரவும் உதவியும் இன்றிவளரமுடியாதது. கடந்த இருபத்தாறுவருடங்களாகப்பல் வேறு கஷ்டங்களையும் தாங்கி எமது மன்றம் வளர்ந்து வருவதற்குக் காரணம் இவ்வூர் மக்களாகிய உங்களது ஆதரவும் மாணவரது ஒத்துழைப்புமே ஆகும்.

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 26 ஆவது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய மன்றத்தலைவர் திரு கோ. குமாரவேலு மேற்கண்டவாறு கூறினார்.

பட்டயக் கணக்காளர் திரு. அ, சோமசுந்தரம் பிள்ளை பேசுகையில் இங்கு படித்த பலகுழந்தைகள் இன்று பெரியவர்களாகி வெளிநாடுகளிலும் இலங்கையிலும் செல்வம் கொழிக்க வாழ்கிறார்கள்.

இவர்கள் வேண்டியளவு பண உதவி செய்து இம்மன்றத்தின் கட்டிடங்களைப் பெருப்பித்தும் வேறு வசதிகள் செய்து கொடுத்தும் முன்னேற்ற வேண்டும்'' என்றார்.

போட்டிகளில்வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வைத்தியகலாநிதி எம். கே. முருகானந்தன் பரிசில்களை வழங்கினார்.

திரு க. நடனசபாபதி பேசுகையில் ''கனடிய அரசு மன்றத்தின் நேர்மையான உழைப்பை மதித்துள்ளது. இன்னும் பல உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறது'' என்றார்.

செயலாளர் திருமதி லோகரஞ்சிதம் நன்றி கூறினார் (இ)

# மீன்பிடி இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன என்று புகார்

முல்லைத்தீவு ஜூலை 7

முல்லைத்தீவு அளம்பில் கிராம சேவை உத்தியோகஸ்தர் பிரிவில் உள்ள தூண்டாய் பகுதியில் 9 பேரின் மீன்பிடி இயந்திரங்களை படையினர் கைப்பற்றி தங்களது முகாமுக்குக் கொண்டுசென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. க. கதிரவேலு இந்திய அமைதிகாக்கும் படை உயர் அதிகாரிகளுடன் இதுசம்பந்தமாக தொடர்பு கொண்டுள்ளார். (இ-92)

CHARTERED ACCOUNTANCY
LICENTIATE 1-EXAMS

பயிற்சி நெறி 2 பிரிவுகளாக
ஆரம்பமாகி உள்ளது

Sept - 88 வாரநாட்கள்
March - 89 வார இறுதி நாட்கள்

" Students Registrations " எம்மால் கையாளப்படும்.

● குறிப்பு:-
March 1989 பரீட்சைக்கு தயார் பண்ணும் மாணவர்கள் 31 st August 1988 இற்கு முன்னர் தங்களை இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்துடன் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்வதற்குரிய ஒழுங்குகள் எம்மால் செய்து தரப்படும்.

விபரங்கட்கு.
North Ceylon
Technical Institute
14, St. Peters Lane, Hospital Road,
JAFFNA.
(சி-5590)

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் த. துபீசன்

அனந்தர்புளியங்குளத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் - விஜயலட்சுமி தம்பதிகளின் அருமைப் புதல்வன் துபீசன் இன்று (7.7.88) தனது பிறந்த நாளை அல்வாயில் கொண்டாடுகிறார். அவரைப் பெற்றோர் உற்றார், உறவினர், பக்கலையும் பெற்று [illegible] (4779)

விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]
பிரிவு 4

O/L
DAY CLASSES [8. 30 – 1. 30]
EVENING CLASSES [2. 45 – 4. 45]
MORNING CLASSES [6. 15 - 7. 45]

ஆண்டு 10, 9, 8, 7. 6, ம் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
[ காலை 6. 15 – 7. 45, மாலை 2. 45 – 4. 45 ]
புதிய வகுப்பு ஆரம்பம்: 13. 7. 1988

மு. குறிப்பு:-
I. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே நிறுவனம்.
II. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
III. மாணவர்கள் தரம் அறிந்து வகுப்புக்கள் பிரித்து நடாத்தப்படும்.
IV. G. C. E. [O/L] பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்பட்டதுதெரிந்ததே. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடாத்தப்படும்.
(C5609)

உடனடி வேலைவாய்ப்பு

KUWAIT
1. Cleaners — 30 KD
2. Office Boys Kuwait — 30 KD — 5 (English)
3. Audio Vedio Technician — 65 KD — 1

SAUDI ARABIA
1. Cleaners — 320 & 100 Riyals

HOSPITAL
1. Security Clerk — 03 — 400 & 100 Riyals
2. Food Service Attendant — 10 — 350 & 100 ...
3. Cashier — 07 — 400 & 100 ...
4. H/V Driver (Mini Bus) — 07 — 550 & 100 ...
5. Video TV Opt. — 06 — 400 & 100 ...
6. Librarian (Asst.) — 02 — 400 & 100 ...
7. Medical Custodian — 01 —
8. Store Record Clerk — 02 — 400 & 100 ...
9. Receiving Clerk — 04 — 400 & 100 ...
10. Tel. Switch Operator — 02 — 400 & 100 ...
11. Security Guard — 10 — 350 & 100 ...
12. Security Shift Leadman — 03 — 500 & 100 ...
13. Fire Inspector — 02 — 500 & 100 ...
14. Clerk Typist — 05 — 425 & 100 ...
15. Welder (Oxygen) — 02 — 450 & 100 ...
16. Cleaning Labourers — 52 — 330 & 100 ...
10 hours duty

CONSTRUCTION
1. Auto Mechanic — 03 — 750 & 150
2. Carpenter Shuttering — 08 — 550 & 150
3. Tile Fixers — 04 — 550 & 150
4. Steel Fixers — 05 — 550 & 150
5. Electricians — 02 — 550 & 150
6. Mason — 04 — 550 & 150
7. Labourers — 13 — 420 &

மேற்கூறிய Hospital உம், Constructionஉம் நேர்முகப் பரீட்சை கொழும்பில் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறும். அதன் பின்பன மற்றவைகளை ஆயத்தம் பண்ணலாம்.

OPEN VISA
1. Farmers — 450 & Food — 10
2. Sign Board Pounter — 800 & 100 — 1
உடன்படிக்கை மூன்று வருடங்கள்.

பதிவு செய்து வையுங்கள் :
Accountant — 1800 SR
Salesman — 1000 SR
Plant Factory — 1100 SR
Drivers (Concrete Mixer) — 1000 SR
Store Keeper — 1000 SR
Electrician — 900 SR

நிபந்தனை :
1. விசா பெற்றுக் கொடுத்த பின், அறிவிக்கும் காலத்தில் பணத்தைச் செலுத்தி வெளிநாடு செல்லத் தவறினால் முற்பணத்தையோ கடவுச்சீட்டையோ திரும்பப் பெற முடியாது.
2. விசா பெற்றுத்தர எடுக்கும் குறிப்பிட்ட காலத்துக்குள் என்னிடம் கடவுச்சீட்டை நீங்கள் திருப்பிப்பெற முடியாது. தெளிவாக ஒத்துழையுங்கள். குவைத் சில நேரங்களில் குறிப்பிட்ட காலத்துக்குள் வரச் சுணங்கலாம்

தயவு செய்து காலை 7 மணி தொடக்கம் பி. ப. 1 மணிவரை சந்திக்கவும். என்னை இங்கு சந்திக்கத் தவறினால் கொழும்பில் CROSS TRAVELS, 65, 67, Hospital Street, Colombo-1 இல் சந்திக்கலாம். அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

M. Shanmugaratnam
( யாழ். கல்லூரியின் பழைய மாணவன் )
EX — SI of POLICE,
Sivankovillady, Sitankerny.
அல்லது
(1) V. கனகலிங்கம் (2)அமிர்தலிங்கம் மாஸ்ரர்.
7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. — சிங்கமகன், சண்டிலிப்பாய்.
(3) நோபிட் (ஜோர்ச்)
ராஜா வெல்டிங் வேர்க்ஸ்,
சங்கானை றோட், அச்சுவேலி.
கொடுக்கல் வாங்கல் சந்தேகம் ஏற்படின் நேரடியாக என்னுடன் தொடர்பு கொள்ளவும், (C-5667)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களை விசாரிக்கும் போது அதிபரிடம் தெரிவிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி ஜூலை 7

ஆசிரியர்களை விசாரணைக்கு உட்படுத்தும் போது அது பற்றி பாடசாலை அதிபருக்கு அறிவிக்கவேண்டும், அதே போன்று மாணவர்களை விசாரணை செய்தல் கைது செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது அது பற்றி அதிபருக்கு அறியத்தர வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை கிளிநொச்சி வட்டக்கச்சி, கொத்தணிப்பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள், பல்வேறு சமூக சேவைத் தாபனங்கள் ஆகியவை இணைந்து கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஊடாக கிளிநொச்சி பிரஜைகள் குழுவுக்கும், இந்திய இராணுவப் பொறுப்பதிகாரிக்கும் அனுப்பி வைத்துள்ளன.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் ஆசிரிய ஆசிரியைகள் அடையாளக் கார்ட் காட்டியும் நடுவீதியில் பலமணி நேரம் தடுத்துவைக்கப்படுகின்றனர்.

பாடசாலையில் கல்வி பயிலும் உயர்தர வகுப்பு மாணவன் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் இது தொடர்பாக இது வரை விசாரணை நடத்தப்படவில்லை.

சீருடையுடன் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர். விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது (இ–76)

## உப்பு விளைச்சல்

கோப்பாய் ஜூலை 7

தற்போது நிலவும் கடும் வரட்சியினால் கோப்பாய் கடல்பகுதியில் உப்பு விளைய ஆரம்பித்துள்ளது. (இ-72)

## யாழ். நகரில் ஐ.நா.அலுவலகம்

யாழ்ப்பாணம், ஜூலை.7

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன உயர் ஸ்தானிகர் குழுவின் அலுவலகம் ஒன்று யாழ். நகரில் நிறுவப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள 223 ஆம் இலக்க இல்லத்திலேயே இந்த அலுவலகம் அமைக்கப்பட உள்ளது.

இதற்காக குறிப்பிட்ட இல்லத்தில் தற்பொழுது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த மாதமளவில் இங்கு ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் குழுவின் அலுவலகம் இயங்க ஆரம்பிக்கும்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்யவுமே இந்த அலுவலகம் இங்கு அமைக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ–9)

## சிங்கள மொழிக்கு விண்ணப்பித்த சிலர் பரீட்சையைத் தவறவிட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இப்பொழுது நடைபெற்று வரும் விசேஷ ஜீ. சி. ஈ. பரீட்சையில் இரண்டாம் மொழியான சிங்கள மொழிக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சில கஷ்டங்களுக்குள்ளானார்களெனத் தெரிய வருகிறது. சிலர் பரீட்சையையும் கோட்டை விட்டனர்.

யாழ் இந்துக் கல்லூரி பரீட்சை மண்டபத்தில் நடைபெற்ற பிரஸ்தாப பரீட்சை பற்றி சில தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அறியாததாலேயே அவர்கள் சில இன்னல்களுக்குள்ளானார்கள் எனத் தெரிய வருகிறது.

இதுபற்றி யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. வே. சபாநாயகத்திடம் எமது செய்தியாளர் வினவிய போது இந்துக் கல்லூரியைப் பரீட்சை நிலையமாகக் குறிப்பிட்டு இரண்டாம் முறையாக அனுப்பப்பட்ட பிரவேசக் கார்ட்டுகள் உரிய காலத்தில் அவர்களிடம் சேர்க்கப்படாததே இதற்குக் காரணமெனத் தெரிவித்தார்.

பிரவேசக் கார்ட்டுகள் யாவும் தபாலில் அனுப்பப் பட்டதென்றும் அவர் சொன்னார். (இ-6)

## முல்லைத்தீவில் சுமுகமான முறையில் ஜீ. சி. ஈ. பரீட்சை

முல்லைத்தீவு ஜூலை 7

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் எவ்வித அசம்பாவிதங்களுமின்றி விசேஷ ஜீ. சி. ஈ. பரீட்சை ஆரம்பமானது.

53 பரீட்சார்த்திகள் சிங்கள மொழிப்பாடத்திற்குத் தோற்றினர்.

இவ்வருடமே இம்மாவட்டத்தில் சிங்கள மொழி பாடப் பரீட்சார்த்திகள் அதிகமாகத் தோற்றியுள்ளனர்.

114 பேர் விண்ணப்பித்து 53பேர் பரீட்சையில் தோற்றியுள்ளனர் என்று அறியப்படுகிறது. (இ–92)

## உலகில் செல்வம் நிலையற்றது

பண்டத்தரிப்பு ஜூலை 7

உலகில் செல்வம் நிலையற்றது. அது நிலையானது. நித்திய இன்பம் தருவன என்று மயங்கி மதிகெட்டுப் போகக்கூடாது. இதனையே மணிவாசகப் பெருமான் வாழ்வு காட்டுகின்றது.

வித்துவான் கா. வேல்முருகன் இப்படிக்கூறினார்.

பண்டத்தரிப்புஇந்துக் கல்லூரியில் நடந்த மணிவாசகர் விழாவில் அவர்சிறப்பு சொற்பொழிவு ஆற்றினர்.

கல்லூரி சைவவளர்ச்சிக் கழகத் தலைவர் செல்வி குட்டித்தம்பி விழாவுக்கு தலைமை வகித்தார் வித்துவான் வேல்முருகன் தொடர்ந்து பேசுகையில் பிள்ளைகளே நீங்கள் எக்காரியம் செய்யும் போதும் இறைநினைவுடனேசெய்யுங்கள் சிரிய வாழ்வு கிட்டும் வாழ்வில் அமைதியும் நிறைவும் காணலாம்: தீய எண்ணங்கள் உங்கள் உள்ளத்தில் தோன்றுது என்றார். (இ120)


NEW MASTER INSTITUTE

B. M. C. LANE, JAFFNA.

90 A/L

WEEKEND CLASSES

Chemistry - 7-30 a.m.
Physics - 8-30 a.m.
Botany - 9-30 a.m.
Zoology - 10-30 a.m.
Pure Maths- 9-30 a.m.
Applied ,, - 10-30 a.m.

(எமது வழமையான ஆசிரியர் குழு)

ஆரம்பம் :

10-07-88 Sunday

(C 5655)


## வவுனியா மாவட்ட சிவில் நிர்வாகத்தில் மேலும் கட்டுப்பாடு

வவுனியா, ஜூலை 7

வவுனியா மாவட்டத்தின் சிவில் நிர்வாக சீர்குலைப்பு நடவடிக்கையில் மேலும் பல கட்டுப்பாடுகளை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளார்கள்.

கடந்த திங்கட்கிழமை முதல் கட்டிடத் திணைக்களம், நெடுஞ்சாலைகள் திணைக்களம் நில அளவையாளர் திணைக்களம் தொழில் திணைக்களம், தேசிய வீடமைப்பு அதிகார சபை, காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவைகள் மறு அறிவித்தல் வரை இயங்கக்கூடாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனம் கல்வி சுகாதாரம், தபால் தொலைதொடர்பு மற்றும் கச்சேரியின் அத்தியாவசிய சேவைத் திணைக்களங்கள், புனர்வாழ்வுப் பகுதி என்பனவே தற்போது இயங்கி வருகின்றன.

வவுனியாவில் உள்ள வங்கிக்கிளைகள் வாரத்தில் திங்கள் வெள்ளி தவிர்ந்த ஏனைய 3 தினங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன, [ஒ-164]

## பசு வதைக்கு எதிராக நல்லூரில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

பசுவதைக்கு எதிரான பிரசாரம் ஒன்றை எதிர் வரும் கதிர்காமக் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பிக்கவேண்டும்.

சகல இந்துமாமன்றங்களும் இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு நல்லூரில் உண்ணாவிரதம் இருக்க வேண்டும்.

தெல்லிப்பளை இந்து இளைஞர் மன்றத்தில் அண்மையில் நடைபெற்ற பேரவையின் கூட்டமொன்றில் பேசிய ஆசிரியர் வே. க. தனபாலன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்பேசுகையில்:–

நடப்பு ஆண்டை பசு வதைக்கு எதிரான ஆண்டாகப் பிரகடனம் செய்வதெனவும், இதற்கான ஒத்துழைப்பை சகல மன்றங்களும் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இந்து இளைஞர் பேரவையின் உபசெயலாளர் திரு. சி. சி. வரதராஜா பேசுகையில் பஞ்சாங்கங்களுக்கிடையேயுள்ள வேறுபட்ட கணிப்பு முறைகளால் சமயநிகழ்ச்சிகள் வெவ்வேறு தினங்களில் வருகின்றன. சமய நிகழ்ச்சிகள்யாவும் முரண்பாடான திகதியின்றி ஒரே திகதியில் வரும் விதத்தில் இரண்டு விதக் கணிப்பாளர்களும் ஒத்துவரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

பேரவைத் தனதிகாரி உட்பட மற்றும் பலர் கூட்டத்தில் பேசினர். [இ-6]

வங்கிப் பதவி உயர்வு:

## 203 பேர் தரம் உயர்வு அதில் 20 பேரே தமிழர்

கொக்குவில் ஜூலை 7

இலங்கைவங்கி அண்மையில் நாடு பூராவுமுள்ள தனது கிளைகளில் எழுதுவினைஞர்களாகவும், காசாளராகவும் பணியாற்றிய 203பேரை உத்தியோகத்தர் தரம் நான்குக்கு பதவியுயர்த்தி உள்ளது.

1987 பெப்ரவரி மாதம் இப்பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது தகுதியுடைய 4,000 ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர்.

இவர்களுக்கு இவர்கள் கடமையாற்றிய மாவட்டங்களிலேயே நேர்முகப் பரீட்சை முதலில் நடத்தப்பட்டது.

இதில் தெரிவு செய்யப்பட்ட 100 பேர் இவ்வருடம் ஜனவரி மாதம் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கென கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 203பேர் ஜூன் முதலாம்திகதி தொடக்கம் உத்தியோகத்தர் தரம் நான்குக்கு பதவியுயர்த்தப்பட்டனர்.

இவர்களில் 20 பேர் மட்டுமே தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ–69)

## திருத்த வேலை

கோப்பாய் ஜூலை 7

கோப்பாய் - [illegible] பாதை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ–72)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பரமு பவுல் தாமு
(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம் 22- 2- 1919 | மறைவு 7- 7- 1987

அன்பின் உறைவிடமாய்
அலிஸ் மங்கை அருந்துணையாய்
அருமைப் புதல்வர்க்கு
அருநெறிக் குருவானீர்

சத்தியச் செல்வங்கள் நால்வர்
சத்யசோதி ஓரரும் புதல்வி
வித்தகராய் விளங்க
வித்திட்டீர் ஐயா –நீங்கள்

மருமக்கள் பேரமக்கள்
இனமக்கள் எல்லோரும்
கனமான கவலையிலோ
மனமோடச் சென்றீரோ
–என்னவிந்தை

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு என்றும் எம் மனதை விட்டகலாது —உங்கள் பாதமலருக்கு

அஞ்சலியைச் சமர்ப்பிக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(5766)

### 10 ஆவது நினைவஞ்சலி

நல்லூர் செட்டித் தெருவைச் சேர்ந்த
டாக்டர்
சரவணமுத்து சோமசுந்தரம்

தோற்றம்: 02 - 11 - 1912 | மறைவு: 27 - 6 - 1978


திதி: 7 - 7 - 1988

அன்பின் தெய்வமே! எம்மை நீங்கள் விட்டுப்பிரிந்துபத்து ஆண்டுகள் ஓடிமறைந்து விட்டன! எமது உள்ளம் உங்களை மறக்கவில்லை உங்கள் நினைவுகள் எம்மில் இருந்து அகலவில்லை. கள்ளமில்லா உம்பிரிவால் நித்தமும் வாடுகிறோம்; உங்கள் ஆத்மாசாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்பு மனைவி
சகோதரர்கள், மைத்துனர்கள்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5786)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. பரமலிங்கம் நித்தியானந்தம் B. A.

தோற்றம்:- 06- 04- 1939 | மறைவு:- 19- 06- 1987

திதி:- 07- 07- 1988

பிரமச்சரிய விரதத்திற்கு இலக்கணமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே, வாரிசுக்கோர் மகனே, பாசத்திற்கோர் தம்பியே, அண்ணாவே, உறவுக்கோர் மைத்துனரே, அன்புக்கோர் மாமாவே, ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம்மனது மாறவில்லை உங்கள் நினைவு. அன்பின் திருவுருவாய் அறிவின் ஒளிச்சுடராய் பண்பின் இருப்பிடமாய், பலரும் மதித்திட்ட எங்கள் குலவிளக்காய் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த உங்கள் நினைவுடன் காலமெல்லாம் வாழ்ந்திடுவோம்.

ஒரு பொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம் – யோகர்

அன்புத் தந்தையார், தாயார்,
சகோதரிகள், மைத்துனர்மார்,
மருமக்கள், உறவினர்கள்.

61/5, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(5781)

### 45 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. கந்தசாமி மதியாபரணம்
(28 ஸ்ரீ 2829 இலக்க லொறி உரிமையாளர்)

தோற்றம் 27-11-1946 | மறைவு 27-5-1988

அந்தியேட்டிக் கிரியைகள் 10-7-88 நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

மனைவி: K. செல்லம்மா,
மக்கள்: [illegible] மூர்த்தி, கிருஷ்ணபவான்,
சுதாகரன், மகள் பவானி.

(5181)

### 40 ஆவது மாத நினைவஞ்சலி



பொன்னையா தேவகனிராசா

கர்ப்பத்தில்: 1963. 01. 22 | சொர்க்கத்தில்: 1985. 03. 13

அன்புருவே அகல்விளக்கே
அகலாத பேருருவே
புன்சிரிப்பே புகழ் மகனே
புது நட்சத்திரமே
கண்மணியே கரவெட்டி
உதிர்த்த காளைக் குமரனே
பொன் முல்லைத்தீவின் செல்வா
தேவ கனிராசாவே
அன்னை மனம் அங்கலாய்க்க
அன்புத் தந்தை நோக
முன்னை பிறந்த சகோதரர்
முழு நினைவின்றிப் பரிதவிக்க
என்ன செய்வ தென்றே
இளையவர்களும் ஏங்க
மின்னொளியாய் மறைந்து விட்டாயே.
உன்னை இழந்து நாற்பது மாதமாகியும்
கண் முன்னே நீ இருந்து பேசிச்சிரிக்கின்றாய்
இன்னும் எத்தனை நாற்பது மாதமாகினும்
உன்னைக் கண்டிட எம்மனம் துடிக்குதே.
கண்ணீர் பெருகவே உன் ஆத்ம சாந்தி
இன்னாள் வேண்டி இயம்புகின்றோமே
கண்ணா உன் ஆத்மா சாந்தி பெறவே
என்னாளும் இறைவனைப் பிரார்த்திப்போமே!

இவ்வாறு கண்ணீர் விட்டுப் புலம்பும்:
அப்பா, அம்மா, தம்பிமார், ஜெயரூபன், ஜெயகனிராசா, பாபு, ஆச்சி, அண்ணமார் சந்திரகுமார், ஆனந்தகுமார், உமாசரன், அண்ணிமார், குமாரி, யோகேஸ், அக்கா, றதினி, தங்கை கிரிஷா, அம்மம்மா, பெரியம்மா, பெரிய ஐயா, அப்பப்பா, அப்பாச்சி, குஞ்சியப்பு, குஞ்சியம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெறுமக்கள் மற்றும் உறவினர், நண்பர்கள்.

(5174)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி.

**பொருள்:**
ஒருவர் சொல்லாமலே அவருடைய முகத்தை நோக்கி அவர் கருதிய குறிப்பை அறிகின்றவன் எப்போதும் உலகத்திற்கு ஓர் அணிகலன் ஆவான்.


# உதயன்

உண்மை - அச்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
07-07-1988 த. பெ. இல. 23


## அழியுங்கள், அபகீர்த்தியை!

**பூ**ஸா இராணுவத் தடுப்பு முகாமில் வாடி வதங்கும், யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட கைதிகள் சார்பில், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்துக்கு எழுதப் பட்டருந்த கடிதத்தை உதயன் வாசகர்கள் படித்திருப்பார்கள்.

நீண்ட காலமாகச் சிறைவாசம் அனுபவிக்கும் கைதிகள், அங்கு படும் கஷ்டங்கள், இன்னல்கள், அவலங்கள், துன்ப துயரங்களை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் அங்குள்ள அல்லல்களை விட, தமது பகுதி மக்கள் தங்களுக்கு மனிதாபிமான ரீதியில் சிறு உதவியைத் தானும் செய்வதற்கு முன் வரவில்லையே என்ற வேதனை, அவர்களின் மனதை மிக ஆழமாகத் துளைத்திருக்கும் என்பது நிச்சயம். சிறையில் படும் துயரங்களை விட மனம் நொடிந்து போகும் அளவுக்கு இந்த வேதனை கணத்துக்குக் கணம் அவர்கள் மனதை உறுத்திக்கொண்டே இருக்கும்.

எதிரி அடிக்கும் பத்து அடிகளை விட, நண்பன் அல்லது உறவினன் அடிக்கும் ஓர் அடி ஒருவனின் உள்ளத்தை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பதை உளவியல் தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

தங்களுக்கு உதவுமாறு விடுத்த வேண்டுகோளை, தமது பகுதி அதிகாரிகள், மக்கள் புறக்கணித்து விட்டார்கள் என்பதை நினைத்துச் சிறையில் உள்ள யாழ். மாவட்ட இளைஞர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு வேதனை அடைந்திருப்பார்கள், கண்ணீர் விட்டிருப்பார்கள் இதயத்திலிருந்து இரத்தம் வடித்திருப்பார்கள் என்பதை எழுத்தில் வடிக்க முடியாது. ஒவ்வொருவரும் கைதிகளின் நிலையில் இருந்தால் தான் முழுக்க முழுக்க சரியாக அவர்களின் மனத்தாங்கலை உணர்ந்து கொள்ள முடியும்.

தமிழ் மாவட்டங்கள் எல்லாவற்றிலுமே இப்போது அசாதாரண நிலைமை நிலவுகிறது. என்னும் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் சிறையில் வாடும் தமது பகுதி இளைஞர்களின் பால் காட்டிய பரிவையும், மனித நேயத்தையும் யாழ்.மாவட்ட மக்களால் காட்ட முடியவில்லை; அவர்களுக்கு உதவ முன்வரவில்லை. இது மிக வெட்கக் கேடானதாகும். யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவருக்கும் தலைகுனிவை உண்டாக்குவதாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, யாழ்ப்பாண மக்கள் சுயநலம் மிக்கவர்கள் என்பது எழுத்துக்கு எழுத்து நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் எத்தனையோ சமூகநல இயக்கங்கள் இங்கு முன்னின்று உழைக்கின்றன. இங்கு வாழ்பவர்கள் எமது மக்கள்; தொலைவில் சிறையில் வாடுபவர்கள் சொந்த மக்கள் அல்லர் என்ற எண்ணம் எவருக்கும் இருக்கலாகாது.

யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்ட அவமானம்; பரிகாசம் உடனடியாகப் போக்கப்பட வேண்டும். அதிகாரிகளும், பிரசைகள் குழுக்களும் விட்ட தவறுகள் நிவிர்த்தி செய்யப்படவேண்டும். அபகீர்த்தி அழிக்கப்பட வேண்டும். பூசா சிறைச்சாலையில் உள்ளவர்களின் பெற்றோர்களை, மனைவி மக்களை, உறவினர்களை அங்கு அழைத்துச் செல்ல உடனடி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். சிறையில் இன்னற்படுவோர் மனம் குளிர அவர்களுக்கு உதவுதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

காலத்தால் செய்யும் உதவி பெரியது. காலம் பிந்திச் செய்யும் உதவி, உதவி செய்யாமல் இருப்பதை விட மேலல்லவா?

# ஜெயலலிதாவை முதலமைச்சராக ஏற்கும் அணியுடனேயே கூட்டு!

சென்னை ஜூலை 6
அதிமுக(ஜெ)அணியின் அரசியல் விவகாரக் குழுவைக் கலந்த பின்னர் செல்வி ஜெயலலிதா தனது ஆதரவாளர்களின் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

அதன் பின்னர் செல்வி ஜெயலலிதா செய்தியாளருக்கு பேட்டியளித்தார்.

### அ.தி.மு.க.-(ஜெ)அணி முடிவு

கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவை வருமாறு:

எந்தக் கட்சியுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டாலும் ஜெயலலிதாவை முதலமைச்சராக ஏற்கும் கட்சியுடன் தான் தேர்தல் உடன்பாடு வைப்பது.

பொதுச் செயலாளர் ஜெயலலிதா புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து தமிழ் நாட்டில் விரைவில் பொதுத் தேர்தலை நடத்தும்படி கோர வேண்டும்.

எந்தக் ஆட்சியுடன் கூட்டணி பற்றிய பேச்சு நடத்தினாலும் அந்தப் பேச்சுவார்த்தையை ஜெயலலிதா தான் நடத்தவேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்த ஜெயலலிதா மேலும் சொன்னதாவது,

தீர்மானங்கள் அடிப்படையில் புதுடில்லியில் காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து தேர்தல்கூட்டணி பற்றி பேசவுள்ளேன்.

பிரதமரை எப்போது சந்திப்பேன் என்று இப்போது கூறஇயலாது.

இப்படி ஜெயலலிதா சொன்னார். (எ)

## எல்லை மூடப்பட்டது

புடாபெஸ்ற், ஜூலை 6
ஹங்கேரியுடனான எல்லையை ருமேனியா மூடியதாக அறிவிக்கப்படுகிறது.

ருமேனியாவில் உள்ள ஹங்கேரிப் பிரசைகள் குறித்து ஹங்கேரி அரசு தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டி ருமேனிய அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. (எ)

## ராமகிருஷ்ண ஹெக்டே விடுக்கும் பயமுறுத்தல்

பெங்களூர், ஜூலை 6
கர்நாடக ஜனதாக் கட்சியில் விரிசல் மேலும் அதிகரித்து இருப்பதாக அறியப்படுகிறது.

ஜனதாத் தலைமைப் பீடம் தொடர்ந்தும் அதிருப்தியாளருக்கு ஊக்கமளித்தால், முதலமைச்சர் பதவியில் இருந்து விலகி விடப்போவதாக திரு. ராமகிருஷ்ண ஹெக்டே தெரிவித்தார்.

இதனிடையில் மாநில ஜனதாத் தலைவரால் பதவிநீக்கம் செய்யப்பட்ட 6 எம்.எல். ஏக்கள் ஜனதாத் தலைவர் அஜித்சிங்குக்கு முறையிட்டுள்ளனர்.

பதவிநீக்கம் செய்யும் மாநில உத்தரவை ரத்துச் செய்யும்படி அந்த ஆறுபேரும் கோரியுள்ளனர். (எ)

**வெளி உலகில்**

## அமெரிக்கத் தூதரகங்களின் பாதுகாப்புத் தீவிரம்!

வாஷிங்டன், ஜூலை 6
பல்வேறு நாடுகளில் உள்ள தனது தூதரகங்களின் பாதுகாப்பை அமெரிக்க அரசு பலப்படுத்தி உள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

விமானத்தைச் சுட்டு வீழ்த்தி 290 பயணிகளைக் கொன்ற அமெரிக்க அரசைப் பழிவாங்கப் போவதாக ஈரான் அரசு சூளுரைத்துள்ளதல்லவா?

அதைத் தொடர்ந்தே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை என்று அதிபர் றேகன் தெரிவித்தார்.

ஈரானின் எச்சரிக்கையைப் பாரதூரமானதாகக் கருதுவதாகவும் அதிபர் றேகன் சொன்னார்.

### றேகன் வருத்தம்

வாஷிங்டன், ஜூலை 6
விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவத்துக்கு அமெரிக்கா, ஈரானிடம் வருத்தம் தெரிவித்துள்ளது.

சம்பவம் நடந்த சில மணித்தியாலயங்களில் வருத்தம் தெரிவிக்கும் செய்தியை அதிபர் றேகன், ஈரான் அரசுக்கு அனுப்பி வைத்தார் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### அதி வேக ரயில்

உலகிலேயே அதிவேகமாகச் செல்லும் ரயிலை மேற்கு ஜேர்மன் நிபுணர்கள் தயாரித்துள்ளனர். இந்த ரயில் வெள்ளோட்டத்தின் போது மணிக்கு 406 கிலோ மீற்றர் வேகத்தில் சென்றது. (உ)

## நிபுணர் குழு வளைகுடா விஜயம்

பஹ்ரைன், ஜூலை 6
விமானத்தைச் சுட்டு வீழ்த்திய சம்பவத்தைப் பற்றிப் பூரண விசாரணை நடத்த அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள்குழு வளைகுடா சென்றடைந்தது.

அமெரிக்கக் கடற்படைத் தளபதி இக்குழுவுக்குத் தலைமை வகிக்கிறார். (எ)

# சட்டமா அதிபர் ராஜினமா!

வாஷிங்டன், ஜூலை 6
அமெரிக்க சட்டமா அதிபர் எட்வர்ட்மீஸ் நேற்று தனது பதவியில் இருந்து விலகிக் கொண்டார் என்று அறிவிக்கப்பட்டது.

அதிபர் றேகனின் நெருங்கிய சகாவான திரு. மீஸ் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டார்.

திரு. மீஸ் நிர்வாகத்தில் சீர்கேடுகள் இடம் பெற்றிருப்பதாகக் கூறி உயர் அதிகாரிகள் பலர் அரசில் இருந்து ஏற்கனவே ராஜினமாச் செய்துவிட்டனர். (எ)

### அமைதிப் பேச்சுக்கள்

வாஷிங்டன் ஜூலை 6
அங்கோலாப் பிரச்சினை, நமீபியாவிற்கு சுதந்திரம் வழங்குதல் ஆகியவை குறித்து இறுதிக்கட்ட அமைதிப் பேச்சுக்கள் அடுத்த வாரம் வாஷிங்டனில் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அங்கோலாவில்இருந்து கியூபா படைகள் விலக்கப்படுதல், நமீபியாவில் இருந்து தென் ஆபிரிக்க படைகள் விலக்கப்படுதல் ஆகிய பற்றியே இப்பேச்சுக்களில் முடிவு செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

தற்போதைய நிலை நீடித்தால்

# பால் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து

சொக்குவில் ஜூலை 7
தற்போதைய நிலை நீடித்தால் பால்தட்டுப்பாடு, பால்விலை உயர்வு தவிர்க்க முடியாதவை ஆகிவிடுமென்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கோமாரி நோய் காரணமாக செயற்கை முறையில் சினைப்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

திருநெல்வேலி நிலையத்திலும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் கால்நடை வளர்ப்பாளர்கள்பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-64)

### விவேகானந்தசபைப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவ மாணவிகளுக்கான சுவாமி விவேகானந்தர் நினைவுப் பேச்சுப்போட்டி அண்மையில் யாழ். விவேகானந்த சபையால் நடத்தப்பட்ட முடிவுகள் வெளியாகி உள்ளன.

வைத்தீஸ்வர வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் நடை பெற்ற இந்தப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் விவரம் தரப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெறுபவர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவியான செல்வி மு. ரஞ்சினிதேவி.

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய மாணவி செல்வி. இ. நா. க. நந்தினி, ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலை மாணவி செல்வி. லோ. மேகலா, சன்மார்க்க மகா வித்தியாலய மாணவி செல்வி கு. விநோதினி ஆகியோர் முறையே 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடங்களைப் பெற்று பரிசில்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற் பிரிவில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் சி. நந்தகுமார் முதலாம் இடத்தை எடுத்து தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார்

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் பா. ரேதீஸ்வரன், யாழ். வேம்படி மகளிர்கல்லூரி மாணவி செல்வி பா. [illegible] 3 ஆம் இடங்களைப் [illegible] (சி)

### தபாலகங்களில் 100ரூபா முத்திரை

யாழ்ப்பாணம், ஜூலை 7
நூறு ரூபா பெறுமதியான முத்திரைகளை இனிமேல் யாழ். பெரிய தபால் அலுவலகத்திலும் ஏனைய தபால் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

எனினும் உபதபால் அலுவலகங்களில் 100 ரூபா முத்திரைகள் விற்கப்படமாட்டாது.

கடந்த காலங்களில் 50 ரூபாவுக்கு உட்பட்ட முத்திரைகள் மட்டுமே யாழ். பெரிய தபால் அலுவலகத்திலும்ஏனைய தபாற் கந்தோர்களிலும் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

எனினும் இப்பொழுது நூறுரூபா பெறுமதியுடைய முத்திரைகளை விற்பனை செய்வதற்கு தபாற் பகுதியின் உயர் பீடம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அடுத்து அடுத்த வாரம் முதல் யாழ்- பெரிய தபாலகத்திலும் ஏனைய தபால் அலுவலகங்களிலும் பொது மக்கள் நூறுரூபா முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளலாம். (ஒ-10)

### மறைந்த அதிபருக்கு அஞ்சலிக்கூட்டம்

காங்கேசன்துறை, ஜூலை 7
கடந்த வருடம் இலங்கை இராணுவ நடவடிக்கையின் போது மரணமான வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் அமரர் மு.சிவராசாவின் முதலாம் ஆண்டுப் பூர்த்தியையொட்டி இன்று 7ஆம் திகதி நினைவஞ்சலிக் கூட்டமும், உருவப்படத் திரை நீக்கமும் நடைபெறவிருக்கின்றன.

வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும் இவ் வைபவத்தில் தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு. சி.சிவமகாராசா உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைப்பார். (இ-68)

### புளொட் மறுப்பு

அம்பாறை மாவட்டக் கிராமங்களில் இனந் தெரியாத நபர்களால் மேற் கொள்ளப்படும் கொள்ளைகளுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும்இல்லையென புளொட்' இயக்க அம்பாறைப் பொறுப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

### புனரமைப்பு

கடந்த கால அனர்த்தங்களின் போது சேதமடைந்த கோப்பாய் வடக்கு கிருஷ்ணர் கோவிலின் புனரமைப்பு வேலைகள் சுமார் ஒரு லட்ச ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. [சி-72]

## நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் நேற்றுக்காலை நல்லூர்ப் பகுதியில் உள்ள சகல வீட்டு நாய்களுக்கும் விசர்நாய் தடுப்பூசி ஏற்றினர்.

இதற்கான அறிவித்தல் நேற்று மாநகர [illegible] வான் ஒன்றில் பொருத்[illegible] ஒலிபெருக்கி மூலம் கொடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள்ளிருக்கும் சகல இடங்களுக்கும் இந்த வானிலேயே சென்றுசுகாதாரப் பகுதியினர் நாய்களுக்குத் தடுப்பூசி போட்டனர்.

நல்லூர்ப் பகுதியில் கைலாசபிள்ளையார் கோவிலடியில் வைத்து நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது. (இ-6)

மடுத் திருப்பதியில் எண்மர் மரணம்:

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்டோரைக் கண்டுபிடித்து தண்டனை வழங்க உத்தரவு

யாழ்ப்பாணம் ஜூலை 7
மடுமாதா திருவிழாவின்போது மடுத் திருப்பதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குக.

இவ்வாறு முருங்கன் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மடுக்கோவிலில் கசிப்பு அருந்தி மரணமான கபிரியல்ஞானஜெயமணி(35 வயது) என்ற பெண்ணின் மரணவிசாரணை அண்மையில் நடைபெற்றது.

இந்த விசாரணையை மேற்கொண்ட வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் இந்த உத்தரவை விடுத்தார்.

கடந்த வெள்ளியன்று மடுத்திருப்பதியில் கசிப்பு அருந்தி எண்மர் பலியானது தெரிந்ததே.

ஞானஜெயமணியின் மரணவிசாரணையில் அவரது சகோதரர் சாட்சியமளித்தார்.

வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வே. ஸ்ரீராஜேஸ்வரன் நச்சுத் தன்மை கொண்ட திரவம் அருந்தியதால் மரணம் ஏற்பட்டது எனத் தமது வைத்திய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

ஞானஜெயமணியின் மரண விசாரணையில் அறியவந்ததாவது:

மடுத்திருப்பதியில் உற்சவத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்ற வவுனியா வாசிகள் சிலர் வேறு சிலருடன் சேர்ந்து கோவில் சுற்றுடலில் இரவு வேளையில் கசிப்பு அருந்தினர்.

இதில் நஞ்சூட்டும் திரவம் ஒன்று போதையூட்டுவதற்காகக் கலந்து இருந்தது. இதனை அருந்திய ஏழுபேர் அங்கேயே மரணமானார்கள். ஞானஜெயமணிமட்டும் ஆபத்தான நிலையில் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு அங்கு மரணமானார்.

விசாரணையை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்ததுடன் இவ்வாறு உயிரை அழிக்கும் கசிப்பு உற்பத்தியை ஒழிப்பதற்கு பொது ஸ்தாபனங்களும் பொதுமக்களும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார். (இ-164)

# மீண்டும் வேலை செய்ய அல்லது ஓய்வூதியம் பெற வழி செய்யும் சுற்று நிருபம்

யாழ்ப்பாணம் ஜூலை 7
1983ஆம் ஆண்டுஜூலை அனர்த்தங்களால் ஏற்பட்ட பீதியாலும், பாதுகாப்பின்மையாலும் அறிவித்தல் கொடாமல் வேலைக்குச் செல்லாமலிருந்த அல்லது ராஜினமாச் செய்திருந்த அரச கூட்டுத்தாபன, உள்ளூராட்சி அலுவலர்கள் மீண்டும் வேலைக்குச் செல்லவோ அல்லது ஓய்வில் செல்வதற்கோ உரிமை வழங்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தனவால் யாழ். அரச அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட சம்பந்தப்பட்ட அமைச்சின் 14/88ஆம் இலக்கச் சுற்று நிருபத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 ஜூலை தொடக்கம் இற்றை வரையுள்ள காலப்பகுதியில் இனப் பிரச்சனை தொடர்பாக ஏற்பட்ட வன்செயல் காரணமாக உயிரிழந்தோர் அல்லது நிரந்தரமாக வலுவற்றிருப்போர், பொதுநிர்வாக அமைச்சின் சுற்றுநிருபங்கள் இல: 296, 343, 351, 369 ஆகியவற்றின் பிரமாணங்களுக்கமைய ஓய்வுநிதி பெறவோ அன்றி இதர சலுகைகள் பெறவோ முடியும்.

மேற்படி காரணங்களைக்காட்டி மீண்டும் வேலைக்குச் செல்லவோ அல்லது ஓய்வில் செல்லவோ விரும்பும் அரச கூட்டுத்தாபன, - உள்ளூராட்சி அலுவலர்கள், ஊழியர் அனைவரும் தத்தம் அமைச்சு செயலாளருக்கு, மனுச்செய்து வேலைகளை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம் அல்லது ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ - 6)

### சமூக பாதுகாப்பு காப்புறுதி திட்டம்

கொழும்பு ஜூலை 7
அரச, தனியார் ஊழியர்களுக்கென சமூக பாதுகாப்பு காப்புறுதித் திட்டம் ஒன்றை அமுல் நடத்தவிருப்பதாக தொழில் அமைச்சர் மைக்கல் பெரேரா அறிவித்தார்.

இந்த உத்தேசத்திட்டம் பற்றி சகல அமைச்சுக்களின் செயலாளர்களுடனும் பரிசிலனை செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் செய்தியாளர் மாநாட்டில் சொன்னர். (இ-எ)

## தெற்கில் தொடரும் வன்செயல்கள்

கொழும்பு, ஜூலை 7
வெள்ளவாய என்னும் இடத்தில் 15 வயது மாணவி சோமலதா 20 வயது இளைஞர் ஒருவரால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்என்று அறிவிக்கப்படுகிறது.

வெலிக்கட பொலீஸ் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர் ஒருவர் 24 வயது இளைஞரான சிசிர ஜயலத் என்பவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

உருபொக்க பொலீஸ் பகுதியில் பஸ்கொட என்னுமிடத்தில் அரச தேயிலைத் தோட்டம்ஒன்றில் சுப்பிரின்டன்னை இனந் தெரியாதவர்கள் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

வீட்டில் உணவு அருந்திக்கொண்டிருந்த சமயம் சுப்பிரின்டன்னை திரு. அலஸை துப்பாக்கி மனிதர்கள் சிலர் சுட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்

யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.



# உதயன்

07 - 07 - 1988 வியாழக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.



'ஷப்ரு' யுனிக்கோ பினன்ஸ்
ஆதரவில்
ஜோலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம்
நடாத்தும்

★ ஷப்ரு ★

சுற்றுக் கிண்ணத்துக்கான
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்
கிரிக்கெட் போட்டி

விண்ணப்ப முடிவு:—
12 - 07 - 1988 காலை 10.00 மணி
குலுக்கல் (Draw):
12 . 07 . 1988 மாலை 5 . 00 மணி
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:—
செயலாளர்
ஜொலி ஸ்ரார்ஸ் வி. கழகம்,
யாழ்ப்பாணம்.
விண்ணப்பப்படிவங்களை
திரு. பொன். மகேந்திரன்
492, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்
அல்லது
திரு. க. பூபாலசிங்கம்,
இல. 15, 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
செயலாளர்,
ஜொலி ஸ்ரார்ஸ் வி. கழகம்
45, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(C-5688)



BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

90 A/L
கலை, வர்த்தகம்
சனி, ஞாயிறு வகுப்புகள்

8.00 A.m தமிழ்: செல்வி மீரா
9.00 A.m இந்துநாகரிகம்: ஜோதீஸ்வரன்
10.00 A.m பொருளியல்: வரதராஜன்
11.00 A.m கணக்கியல்: மரியதாஸ்
12.00 Noon வர்த்தகம்: ரட்ணம்
1.00 P.m அளவையியல்: S.S. மனோகரன்

ஆரம்பம்
10-7-88 ஞாயிறு
(C. 5677)



பிளாஸ்ரிக் கவறிங்
(LAMENATING) சேவை

அடையாள அட்டைகள், புகைப் படங்கள், ஆவணங்களை பிளாஸ்ற்றிக் கவரிங் (Laminating)

காகிதம், தோல், பிளாஸ்ரிக், பென்சில், பேனுக்களில் வர்ண உஷ்ண அச்சிடல் (Hot Printing)

தரமாகவும், மிகக்குறைந்த கட்டணத்திலும் செய்துகொள்ள

ஹாசன் பலரக சேவை

21, 6-ஆம் குறுக்குத் தெரு, குருநகர்,
யாழ்ப்பாணம்.
(C 5702)


## தங்க யாழ்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூடி ஆராய்ந்து விருதுக்குத் தகுதியான மூவரைப் பரிந்துரை செய்யும். அம் மூவரில் ஒருவரை கம்பன் கழகம் அவ்வாண்டு விருதுக்குரியராகத் தெரிவு செய்யும். இன்னும் ஒரு சில நாட்களில் தேர்வுக் குழுவில் இடம்பெறும் அறிஞர்கள் பெயர் அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப்படும் அறிஞர்கள் ஊடாக மக்கள், விருதளிக்கப்பட வேண்டியவரெனக் கருதும் நபரைச் சிபார்சு செய்யலாம். என்றும் விருது சம்பந்தமான செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (அ)

## வடக்கு----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தை மேற்கொண்டு இங்கு வந்திருந்த திரு. செல்வரத்தினத்தை உதயன் செய்தியாளர் கோட்டையில் வைத்துப் பேட்டி கண்டார்.

அப்போது அவர்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. மகேசன் செல்வரத்தினம் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் ஏழு மாகாணசபைகளுக்கும் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. எஞ்சியுள்ள வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தேர்தல் நடத்தப்படவேண்டுமாயின் இப்பகுதிகளில் தற்பொழுது உள்ளபதற்ற நிலை நீங்கவேண்டும்.

இதற்கு இலங்கை அரசு, இந்திய அரசு, விடுதலைப்புலிகள் ஆகிய முத்தரப்பாரும் ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

உடன்பாடு மூலம் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு அது அமுல் படுத்தப்பட வேண்டும்.

அதன் பின்பே வடக்கு கிழக்கு பகுதிகளில் தேர்தல் நடத்துவது இலகுவானதாக இருக்கும்,

பலாலியில் இந்திய அமைதிப் படையினரையும் சம்பிரதாய பூர்வமாகச் சந்தித்து உரையாடினேன் என்றார் அவர். (அ-10)

## பொலீஸ்....

ளவில்லை-

இப்போது எமது பாரம்பரியபிரதேசங்கள் படிப்படியாக ஆனால் மிக வேகமாக பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இரு அரசுகளினதும் இராணுவ கெடுபிடிகள் உச்ச நிலையை அடைந்து வருகின்றன.

இந்தக் காலகட்டத்தில் சிவில் நிர்வாக சீர்குலைவுகளை நிவர்த்தி செய்வதற்காக புதிய பொலீஸ் நிர்வாகத்தை தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன

ஆகவே இப்புதிய பொலீஸ் படையை அனைத்து மக்களும் முற்றாக நிராகரிக்கவேண்டும் அத்துடன் இப்பொலீஸ் படைக்குப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் உடனடியாக இதிலிருந்து விலகிக் கொள்வதன் மூலம் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து தம்மை உடனடியாகத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு விலகிக் கொள்வதன் மூலம் தமது (தமிழ் இன) உணர்வை வெளிக்காட்டும்படி வேண்டுகிறோம்.

## சென்னைப் பேச்சுக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மைதான். ஆனால் "ஒப்பரேசன்செக் மேற்" நடவடிக்கைகள் பேச்சுக்களை கேள்விக் குறியாக்கியிருக்கிறது.

இப்படிக் கிட்டு தெரிவித்தார்.

'ஒப்பரேஷன் செக் மேற்' நடவடிக்கைகள் மிகத் தீவிரமானவையாக இருப்பதாகச் செய்திகள் வந்துள்ள போதிலும் இருதரப்பிலும் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தகவல் ஏதுமில்லையே? என்று கிட்டுவிடம் கேட்கப்பட்டது.

"போராளிகள் வெற்றிகரமாக இந்திய இராணுவத்தினரைத் தவிர்த்து விட்டார்கள். ஆனாலும் இத்தீவிர நடவடிக்கைகளின் பலனாக பல நூற்றுக்கணக்கான சிவிலியன்களின் அன்றாட வாழ்க்கை ஸ்தம்பித்து விட்டது. இத்தகைய சூழ்நிலைப் பேச்சுக்களைத் தொடர்வதற்கு ஊக்கமளிப்பதாக இல்லை" — என்று திரு. கிட்டு பதிலளித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கைகளினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு. பிரபாகரனுடன் கிட்டு தொடர்பு கொள்வது கஷ்டமாக இருப்பதாகவும்—

ஒரு இணக்க நிலை ஏற்படுவதற்கு இதுஇடைஞ்சலாக இருப்பதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கம்பட்டிருந்தது. (அ-உ)

## தெளிவா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலை நிலவுகின்ற போதிலும் பேச்சுக்கள் நம்பிக்கையளிப்பவையாக இருக்கின்றன.

இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையில் ஆகப்பிந்தி இடம்பெற்ற பேச்சுக்களும் இதேயளவு நம்பிக்கையூட்டுவனவாக இருக்கின்றன— என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒப்படைக்கப்பட வேண்டிய ஆயுதங்களின் எண்ணிக்கை குறித்து விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டு விட்டதாகவும்—

ஆனால் அவற்றை ஒப்படைக்கவேண்டிய கால அட்டவணை குறித்து இன்னும் இணக்கம் ஏற்படவில்லை என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இந்திய.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரவிட்டது.

இந்திய அமைதிப் படையினரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் கெங்கா பரமேஸ்வரன் (வயது 22) என்பவர் சார்பாகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்திய அமைதிப் படைக்கு எ[illegible] இலங்கை ந[illegible]த்தில் தாக்கல் செய[illegible]ட்ட முதல் வழக்கு [illegible]து என்பது குறிப்பிடத்தக்கது

அப்பீல் நீதிமன்றத்தின் நோட்டீஸ் உத்தரவு குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டது. (உ)

## முதலாம் திகதி திறக்கப்படும்

கொழும்பு, ஜூலை 7

தென் இலங்கையில் மூடப்பட்டுள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தும் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் திறக்கப்படும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பல்கலைக்கழகத்திருத்தச் சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய வெளிவிவகார அமைச்சர் சாகுல் ஹமீது முன் கண்ட நம்பிக்கையை வெளியிட்டார். (இ-எ)

## இரத்தினபுரி-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் கூட்டம் ஒன்றில் வேட்பாளர் நந்தா எல்லவலபேசிக்கொண்டிருந்தார். அச்சமயம் கூட்டத்தினரிடையே குண்டு ஒன்று வெடித்தது. அப்பொழுது ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் காயமடைந்தனர்.

ஆளும் கட்சியினரின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இரண்டாது குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது. அதில் இரண்டு பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர் சுதந்திரக் கட்சி வேட்பாளர் நந்தா எல்லவல பேசிக் கொண்டிருந்த தேர்தல் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கூட்டத்துக்கு இடையே ஜீப் ஒன்று செல்ல முயற்சித்ததாகவும்அந்த ஜீப், அருகில் நடந்து கொண்டிருந்த ஐ. தே. க. கூட்டம் நடந்த பக்கமாக இருந்து வந்ததாக ஒரு தகவல் தெரிவித்ததாக பி. பி. சி. வானொலி தனது செய்தியில் தெரிவித்தது. (அ-எ)

## மன்சூர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கிறது.

ஜனாப் மன்சூர் மாற்றப்பட்டமைக்கும்,வேலை நீக்க கடிதம் வழங்கப்பட்டமைக்கும் நிர்வாக ரீதியான பல காரணங்கள் இருப்பதாகவும்—

அக்காரணங்களைப் பகிரங்கப் படுத்த விரும்பவில்லை என்றும்—

ஆனால் தேவைப்பட்டால் அதைப் பகிரங்கப்படுத்த அமைச்சு தயாராக இருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் கூறினார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பாதிப்பு

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் சிமெந்து ஏற்றுவதற்காக மாவிட்டபுரத்தில் இருந்து தொழிற்சாலை வரை பிரதான வீதியில் லொறிகள் நிறுத்தப்படுகின்றன.

இதனால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-68)


தரமான, தெளிவான, நீண்ட காலம்
பாவிக்கக் கூடிய போட்டோஸ்ரற்
பிரதி செய்து கொள்வதற்கும்
சகல திணைக்கள, கூட்டுத்தாபன
தனியார் நிறுவனங்களுக்குரிய
அடையாள அட்டைகள் பிளாஸ்ரிக்
கவரிங் (Lamination)
செய்து கொள்வதற்கும்

ஞானம்ஸ் ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்.
(C. 5630)



பருத்தித்துறை பல நோக்குக கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை.

அறிவித்தல்

அங்கத்தவர் இடாப்பு முடிவுறுதல்
3-ஆம் காலாண்டு.

கிளைக்குழுத் தேர்தலுக்காக அங்கத்தவர் இடாப்பு 30-9-88 உடன் மூடப்படவிருக்கின்றது.

ஒரு பங்கின் பெறுமதி - ரூபா 10/-

பத்து ரூபாவுக்குக் குறைவான பங்கையுடைய அங்கத்தவர்கள் மிகுதிப் பணத்தை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் தத்தமது கிளைகளில் செலுத்தி பூரண அங்கத்தவராகுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

புதிதாக அங்கத்தவர்களாகச் சேரவிரும்பும் தகுதியுடையோர் தங்களுக்கு அண்மையிலுள்ள எமது கிளையில் உரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று பூர்த்தி செய்து ரூபா 10/- செலுத்தி மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் கிளைமுகாமையாளரிடம் ஒப்படைத்து அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளவும்.

செயலாளர்
செ. செல்வராசா

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
1988-07-05. (C.5706)



வகுப்புகள்

தாதிகளுக்கான பயிற்சி வகுப்புகள்

ஆடி 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. 12 மாத பயிற்சி அளிக்கப்படும்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

காரியதரிசி
யாழ் தனியார் வைத்தியசாலை,
395, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (5790)



Personal Classes For
G.C.E. (A/L) 89

ஆரம்பம் 10-7-1988
ஞாயிறு பிற்பகல் 4.00 மணி

Chemistry - K. சண்முகசுந்தரம் B.Sc
Physics - சோதிலிங்கம் B.Sc
Applied / Pure } - பிரேம்நாத் B.Sc
Botany / Zoology - குணசீலன் B.Sc / கேதீஸ்

230, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(C.5696)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மகேஸ்வரி(சொக்கலிங்கம்)

கந்தையா மகேஸ்வரி (சொக்கலிங்கம்) சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ் சென்ற நல்லதம்பி கந்தையாவின் பாரியாரும் மதிவதனசோதி, திருஅருட்சோதி-Retd. Foreman C.G.R, நிமலசோதி, பேரின்பசோதி U.K, குலசோதி (Canada), மகேந்திரசோதி (Saudi) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருச்சிற்றம்பலம் (காரைநகர் பொட்டர்) பிரபல வர்த்தகர் (தட்டாதெரு), நடராசா U.K, கமலருணி, கௌரி ஆகியோரின் மாமியாரும், ஷேகான், பிரசன்ன, சிறீகாந்த், ஹரிசரன், நவநீதருஜ், அனுசியா, லக்ஷ்மி, சுஜன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 7.7.88 காலை 10 மணிக்கு திருநெல்வேலியில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் — K. திருச்சிற்றம்பலம்.

(5791)

### சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் மட்டுவில் வடக்கைச் சேர்ந்தவரும் பிரபல புராணபடன வித்தகருமாவார். அன்னார் கற்பகத்தின் அன்புக் கணவரும், ச. கணபதிப்பிள்ளை (திறைசேரிப் பணிப்பாளர். கொழும்பு), ச. சின்னத்தம்பி (கொத்தணி அதிபர், கொடிகாமம்), திருமதி சி. வல்லிபுரம், பி. எஸ். சி., (இளைப்பாறிய ஆசிரியை), இ. சண்முகம் (இலண்டன்), திருமதி உ. கந்தசாமி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி நீ. கணபதிப்பிள்ளை, திருமதி சி. சின்னத்தம்பி (ஆசிரியை மட்டுவில் ம.வி.) திரு. வே. வல்லிபுரம் (பாடவிதான வெளியீட்டுத் திணைக்களம்), திருமதி சண்முகம் (இலண்டன்), காலஞ்சென்ற ந. கந்தசாமி (இ.போ.ச.) ஆகியோரின் அன்பு மாமனருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 7-7-88 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

(5795) தகவல்: ச. சின்னத்தம்பி

### கணபதிப்பிள்ளை இராசமணி

பண்டத்தரிப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசமணி காலமானார். இவர் இளைப்பாறிய ஆசிரியர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் யெகநாதன் காலம் சென்ற ஆசிரியர் பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறிட்ஜெற், ஆசிரியர் இராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று 7-7-88 வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெறும்.

(5794) தகவல்; திரு. யெகநாதன்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 229/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 07 - 07 - 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 229/2 Navalar Road, Jaffna on Thursday 07 th July 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org